**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்பு/பொது கலைமாணித் தேர்வு**

**2013/2014 (August/September 2018)**

**OGY 3243 சுற்றுலாவும் அபிவிருத்தியும் (Tourism and Development)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

பகுதி I

1. அ) ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலாத்துறை நிறுவனம் (UNWTO) சுற்றுலா என்பதற்கு கொடுத்துள்ள வரைவிலக்கணத்தினைத் தருக. (03 புள்ளிகள்)

   ஆ) சுற்றுலத்துறையில் திட்டமிடலின் அவசியத்தினை சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

   இ) சுற்றுலாத்துறை திட்டமிடலின் போது எதிர்கொள்ளும் சவால்களை விளக்குக. (10 புள்ளிகள்)

2. அ) சூழல்சார் சுற்றுலா விடுதி (Eco lodge) என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

   ஆ) சுற்றுலா விடுதிகளுக்கும் (Tourist lodge) சூழல்சார் சுற்றுலா விடுதிகளுக்கும் (Eco– lodge) இடையிலான வேறுபாடுகளை மதிப்பிடுக. (06 புள்ளிகள்)

   ஆ) சூழல்சார் சுற்றுலா விடுதி ஒன்று கொண்டிருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களையும் அதன் தொழிற்பாடுகளையும் விபரிக்குக. (12 புள்ளிகள்)

3. அ) இலங்கையில் சுற்றுலா ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றினை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் சுற்றுலாத்துறையின் விருத்திக்கான வளங்கள் வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராய்க. (14 புள்ளிகள்)

## பகுதி II

4. விருத்தியடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்திக்கான ஆயுதமாக சூழல்சார் சுற்றுலாவினை பயன்படுத்த முடியும்" ஏற்றுக்கொள்கின்றீரா? உதாரணங்களுடன் நியாயப்படுத்துளக. (20 புள்ளிகள்)

5. இலங்கையில் 2009 ஆம் ஆண்டினை அடுத்து சுற்றுலாத்துறையானது பாரிய வளர்ச்சியையும் விருத்தியையும் கண்டு வருகின்றது. தரவுகள் உதாரணங்கள் மூலம் விளக்குக. (20 புள்ளிகள்)

6. உமது பிராந்தியத்தில் சுற்றுலாத்துறைக்கு வாய்ப்புக்களுள்ள பகுதிகளை திட்டமிட்டு விருத்திசெய்வதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் நீர் எவ்வாறான ஆலோசனைகளை முன்வைப்பீர் என்பதனை விளக்குக. (20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் **இரண்டினிற்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ) சுற்றுலாத்துறை விருத்தியினால் ஏற்படக்கூடிய சாதக, பாதகங்கள்

ஆ) இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் அரசாங்கத்தின் வகிபங்கு

இ) கலாச்சார சுற்றுலாவினை முன்னெடுப்பதிலுள்ள சவால்கள்

(2x10=20 புள்ளிகள்)